Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 5, Issue - 1, November 2025 E-ISSN: 2583-0481

# Morality of Harlots

**J. Ambedhkar,** Tamil Research Scholar, Ref. No.: 9103/ph.d.k6/Tamil,
Jamal Mohamed College, Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-8460-0867
**Dr. M. Sadik Batcha,** Associate Professor of Tamil, Jamal Mohamed College,
Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: http://orcid.org/0009-0005-2248-2084
**DOI: 10.5281/zenodo.18866149**
**Received:** 27 August 2025, **Revised:** 30 September 2025, **Accepted:** 1 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*The Sangam internal relationship (Agam) is a five-way relationship (Ainthinai uravu) of love. This can be called a consensual relationship. We also know that there is a non-contradictory opposite relationship in life. In such a five-way relationship of love, the opposite relationship is the Parathai. In an environment where women of the Sangam period had adopted the norms of moral virtues such as chastity, fear, shame and modesty, it raises doubts that only certain women lived in a contradictory way. On the basis of moral virtues, this article on Parathaiyar Morality has delineated to reveal the reasons why they lived in such a way of life. The sources from Tolkappiyam and Sangam literature have been used as the resources and justification of the article. The article summarised the trends from the origin to the development of Parathaiyar at the Sangam times. In conclusion, the article summarises the original ideas and sources used in the article.*

**Keywords:** Sangam Literature, Women, Harlot, Morality.

## References

[1] Ilampuranar. *Tolkappiyam Porulatikaram.* Sarada Patippakam, Chennai - 600014, 2005.
[2] Jeyapal, Ira. *Akananuru Mulamum Uraiyum.* New Century Book House, Chennai, 2004.
[3] Somasundaranar, Po. Ve. *Ainkurunooru.* Tirunelveli Tennintiya Saiva Siddhanta Nurpatippuk Kazhagam, Chennai, 1966.
[4] Parimelakar. *Tirukkural.* Tirumakal Nilayam, Chennai – 600001, 1998.
[5] Po. Ve. Somasundaranar. *Kuruntokai.* Kazhaga Veliyitu, Chennai.
[6] Puliyurkesikan. *Patirruppattu.* Sarada Patippakam, Chennai.
[7] Matiyalakan, Ma. "Kuruntokaiyil Uvamai." *Muttukamalam Pannattu Tamil Minnital,* ISSN-1454-1990.
[8] Manikavasagan. *Purananuru.* Umapati Pakam, Chennai – 6000015, 1998.
[9] Visuvanatan, U. A. *Kalittokai.* Kazhaga Veliyitu, Chennai - 10, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பரத்தையர் ஒழுக்கம்

**ஜெ. அம்பேத்கர்**, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 9103/Ph.D.k6/Tamil, ஜமால் முகம்மது கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0005-8460-0867**
**முனைவர் மு. சாதிக் பாட்சா,** இணைப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: http://orcid.org/0009-0005-2248-2084**
**DOI: 10.5281/zenodo.18866149**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க அகத்திணை உறவு என்பது அன்பின் ஐந்திணை உறவாகும். இதனை உடன்பாட்டுறவு எனக் கொள்ளலாம். வாழ்வில் முரண்பாடுற்ற எதிர்நிலை உறவு இருப்பதையும் அறிகிறோம். அவ்வாறு அன்பின் ஐந்திணை உறவில் எதிர்நிலை உறவுக்குறியவள் பரத்தையாவாள். சங்கக்கால மகளிர் கற்பொழுக்கம் சார்ந்து அச்சம், நாணம், மடம் உள்ளிட்ட நெறிமுறைகளைக் கைக்கொண்டு வந்துள்ளச் சூழலில் குறிப்பிட்ட பெண்கள் மட்டும் அதற்கு எதிர்நிலையில் முரண்பட்ட வாழ்ந்திருப்பது ஐயத்தை எழுப்புகிறது. அதனடிப்படையில் தான் அவர்கள் இத்தகைய வாழ்க்கை முறையில் உழன்றுக் கொண்டிருந்ததற்கான காரணங்களை வெளிக்கொணரும் நோக்கிலேயே இந்த பரத்தையர் ஒழுக்கம் எனும் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. கட்டுரையின் எல்லைகளாக தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் கையாளப்பட்டுள்ளது. கட்டுரையில் பரத்தையரின் தோற்றம் முதல் நீட்சி வரையிலானப் போக்குகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்**: சங்க இலக்கியங்கள், மகளிர், பரத்தையர், ஒழுக்கம்.

**முன்னுரை**

மிக உயர்ந்த பயன்பாட்டு ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றி வந்த சங்கக்காலச் சூழலில், குறிப்பிட்ட பெண்கள் பரத்தையர்களாக மாறியதற்கானக் காரணங்கள், அவர்கள் தாங்களாக விரும்பியே பரத்தைமையை மேற்கொண்டனரா அல்லது சங்ககாலச் சமூகம் அவர்களைப் பரத்தைமை மேற்கொள்ள தூண்டியதா? என்கிற காரண காரியங்களை அறிந்துகொள்ள அவர்களின் தோற்றம், வாழ்ந்த இடம், அவர்களின் பங்களிப்பு உள்ளிட்ட சான்றுகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைக்கின்றது.

**பரத்தை**

தமிழ் சமூகத்தில் இவர்களைப் பரத்தையர், கணிகையர், தேவதாசியர் ஆகியோர் தனித்தனிக் குழுக்களாகத் தனித்தப் பண்பாட்டு அடையாளத்தோடு வெவ்வேறு காலப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். காப்பிய இலக்கியங்கள் கணிகையர் என்றும் பக்தி இலக்கியங்களில் உத்திரக்கணிகை, தேவதாசி என்றும் சிற்றிலக்கியங்களில் தாசி, வேசி என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். சங்க இலக்கியங்கள் “பரத்தையர்” என்று குறிப்பிடுகின்றன.

**பரத்தையர் தோற்றம்**

விருப்பு வெறுப்பின்றி பணத்திற்காகவோ, பொருளுக்காகவோ, உடலுறவு கொள்ளுகின்ற செயல் பரத்தமை எனப்படுகிறது. பரத்தமையின் உருவாகத்தை இனக்குழு வாழ்வின் தொடர்ச்சியாகவே கருத வேண்டியுள்ளது. மனிதர்கள் ஒன்றிணைந்து இனக்குழுக்களாக வாழ்ந்த பொழுது அங்கு பரத்தமை என்ற பேச்சு எழுவதற்கே வாய்ப்பில்லை. ஒருதார மணம் என்கிற ஒன்று தோன்றும் பொழுதுதான் அதன் பின்னிணைப்பாகப் பரத்தையும் தோன்றி விடுகிறது. மற்ற மக்களினங்களுக்கிடையில் திருமணத்துக்கு முன்பு இளம்

பெண்களுக்குத் தரப்பட்டிருந்த உடலுறவு சுதந்திரலிருந்து பொது மகளிர் முறை தோன்றி வளர்ந்துள்ளது. ஆகவே, இதுவும் குழுமனத்தின் எச்சம்தான். பரத்தமை தொடர்பில் ஆண், பெண் இருவருக்கும் தொடர்பிருந்தாலும், இதில் பெண்ணே பெரிதும் தண்டனைக்குள்ளாகிறாள். ஆண், பரத்தையர் பலருடன் தொடர்புள்ளவனாக இருப்பது ஆண்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எனவே, ஆண், பரத்தையர் பலருடன் தொடர்பில் இருப்பது குறித்து பெருமிதமே கொள்கிறான். ஆணின் இந்த வரன்முறையற்றப் போக்கே பரத்தையர் முறையை மேலும் மேலும் வளர்த்தெடுத்துள்ளது.

**பரத்தையரின் பெயர்கள்**

பரத்தையர்கள் பலவகைப்பட்டவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப்பரத்தை, நயப்புப் பரத்தை, காதற்பரத்தை என்று பல பெயர்களில் இவர்கள் குறிக்கப்படுகின்றனர். பரத்தையர் பல ஆண்களுக்கும் பொதுவாக இருப்பதால் 'பொது மகளிர்' என்றும், திருமணம் மேற்கொள்ளாதக் காரணத்தினால் 'வரவின் மகளிர்' என்றும் பொருளை மட்டும் நோக்கமாகக் கொண்டு நாடுவதால் 'பொருட் பெண்டிர்' என்றும் இறைவனுக்கு அடியாராகிக் கோயிலில் தொண்டு செய்வதால் 'தேவரடியாள்' என்றும் தன் பெண்மையை விலைக்கு விற்பதால் 'விலைமகள்' என்றும் கடவுள் ஒருவரையே பதியாகக் கொண்டு தனக்கென்று யாரையும் பதியாகக் கொள்ளாமையால் 'பதியிலாள்' என்றும், தாளங்கணித்து ஆடுவதிலும் பொருளுள்ளாரைக் கணித்துச் செல்வதிலும் சிறந்து விளங்குவதால் 'கணிகையர்' என்றும் தாமே வலியச் சென்று பிற ஆடவரிடம் சேரப்போவதால் 'வேசி', 'தாசி', 'விபச்சாரி' என்றும் பல பெயர்களில் பரத்தையர்கள் அழைக்கப்படுகின்றனர்.

**அக இலக்கிய மரபில் பரத்தை**

தலைவனுடைய பாலியல் தேவையை நிறைவு செய்பவளாக வரும் பரத்தையின் இடம் அக இலக்கிய மரபில் முக்கியமானது. தலைவியைப் போன்று சமூகப் பாதுகாப்பு எதுவும் இவளுக்குக் கிடையாது. இது ஒருவகை பலவீனமாக இருந்தாலும் கூட, அதுவே அவளுக்குப் பலமானதும் கூட தலைவியைப் போன்று அச்சம், மடம், நாணம் போன்ற ஆணாதிக்கப் போக்குகள் கொண்ட கருத்தியங்களின் அழுத்தம் பரத்தைக்குக் கிடையாது. பரத்தைச் சுயமாகப் பொருளீட்டில் பிழைப்பவள். எனவே, சுதந்திரமானவளாக வாழ்கிறாள். 'பரத்தை' என்ற சொல் முதன்முதலில் தொல்காப்பியத்தில் இடம் பெறுகிறது.

**"பரத்தையின் அகற்சியின் பிரிந்தோள் குறுகி" (தொல்காப்பியம், நூ. 987)**

**"மாயப்பரத்தை உள்ளிய வழியும்" (தொல்காப்பியம், நூ. 1093)**

**"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே" (தொல்காப்பியம், நூ. 1170)**

இவ்வாறு தொல்காப்பியத்தில் ஒன்பது இடங்களில் பரத்தை என்கிற சொல் இடம் பெற்றுள்ளது. பரத்தைப் பற்றிய வரையறையைக் காணும் பொழுது திருமணம் என்ற நெறியின்றிக் கற்பு என்னும் கட்டுப்பாடின்றி பலரை நாடுகின்றப் பெண் என்று கூறலாம். சங்க அக இலக்கியத்தில் பரத்தைப் பற்றியப் பாடல்களின் எண்ணிக்கை அகநானூறு 9, குறுந்தொகை 5, நற்றிணை 9, ஐங்குறுநூறு 20, கலித்தொகை 8 ஆக மொத்தப்பாடல்கள் 51 ஆகும்.

**பரத்தையர் வாழும் இடம்**

பரத்தையர் தலைவனுடன் தொடர்புடையவர்களாயினும் அவ்வாழ்க்கை இல்லத்திற்குப் புறம்பானது. தலைவனின் மனையில் மனைக்கிழத்தியாக இருக்கும் உரிமை தலைவி மட்டுமே உரியது. இந்நிலையில் பரத்தையர் தொடர்பை விரும்பும் தலைவன், பரத்தையர் வாழுமிடத்திற்குச் சென்று இன்பம் துய்ப்பான். அவ்விடம் அயல்மனையாகவோ, அயற்சேரியாகவோ, அயலூராகவோ இருந்துள்ளது என இலக்கியங்கள் காட்டுகின்றன.

**அயில்மனை**

தலைவி வாழும் இல்லத்திற்கு அருகே பரத்தையர் பெண்ணைத் தலைவர் கொண்டு

வந்து வைத்திருத்தலும் உண்டு. இவ்வாறு மனையருகே பரத்தையை வைத்து தலைவன் இன்பம் நுகர்ந்ததை,

**இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்**
**உழவன் யாத்த குழவியின் அகலாது**
**பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன் (குறுந்தொகை, பா. 181)**

என்ற குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது. பரத்தையர் பாடும் துணங்கைக் கூத்தின் ஒலிவந்து தம்மை எழுப்பியதாகத் தலைவனிடம் வாயில் மறுக்கும் தோழி கூறுகிறாள். இதிலிருந்து தலைவியின் இல்லத்திலிருந்து மிக அருகில் பரத்தையரின் இல்லம் இருந்தால்தான் அவர்கள் பாடும், துணங்கைக் கூத்தின் ஒலி கேட்க இயலும் என்ற செய்தியை அறியமுடிகிறது.

**நினக்கு ஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்**
**தமர்பாடு துணங்கையுள் அரவம் வந்து எழுப்புமே (கலித்தொகை, பா. 70)**

தலைவன் இன்பம் நுகரும் பரத்தையருள் ஒருத்தி, தலைவியின் இல்லம் நோக்கி வந்து முகமன்பல கூறியானும் நின் சேரியைச் சேர்ந்தவள் தான், உன் வீட்டிற்கு அயல்வீட்டில் உள்ளேன் என்பதை,

**மெல்ல வந்து நல்ல கூறி**
**மைஈர் ஓதி மடவோய் யானும் நின்**
**சேரியேனே அயல் இலாட்டியேன் (அகநானூறு, பா. 386)**

என்று கூறுகின்றாள்.

**அயற்சேரி**

தலைவியின் இல்லத்திலிருந்து பரத்தையர் தள்ளியும் இருந்துள்ளான். அவர்களை நாடிச் செல்லுதலைத் தொல்காப்பியன். **"பரத்தையின் அகற்சி" (தொல். அகத்திணையியல், நூ. 40)** என்று குறிப்பிடுவதால் பரத்தையர் வாழிடங்கள், அயற்சேரியாயினும், தலைவன் சென்றமை அறியமுடிகிறது. பாணனிடம் தலைமகனின் கொடுமைக்கூறி வாயில் மறுக்கும் தலைமகள் மனையின் கண்நட்டு வளர்க்கப்பட்ட வயலைக்கொடி அயலேயுள்ள நாணலைச் சுற்றிப்படர்தற்குரிய துறைப்பொருத்திய ஊரன் என்று கூறுகிறாள்.

**மனைநடு வயலை வேழம்சுற்றும்**
**துறைகேழ் ஊரன் கொடுமை நாணி (ஐங்குறுநூறு, பா. 11)**

இதில் இல்லத்திலேயே வளரும் வயலை அதன் எல்லையைத் தாண்டி வெளியே சென்று அங்கு வளரும் வேழத்தைச் சுற்றிப்படர்ந்தது போல தலைவனும் பரத்தையர் சேரிக்கே சென்று இன்பம் நுகர்ந்தான் என்கின்றாள். தலைவன் தேரூர்ந்து செல்லும் அளிவிற்குப் பரத்தையர் சேரி இருந்ததை,

**திண்தேர்த் தென்னவன் நல்நாட்டு உள்ளதை**
**வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்**
**தேனூர் அன்ன இவள் தெரிவளை நெகிழ**
**ஊறின் ஊரனை நிகர வந்த**
**பைஞ்சாயக் கோதை மகளிர்க்கு (ஐங்குறுநூறு, பா. 54)**

என்று ஐங்குறுநூற்று பாடல் சுட்டுகிறது.

**அயலூர்**

தலைமகன் தன்னூரிலுள்ளப் பரத்தையரை இன்பம் நுகர்ந்து பின் புதுப்பரத்தையரை நாடி அயலூருக்குச் சென்ற சூழலும் இருந்துள்ளது. இந்திர விழாவின் போது ஊர்தலைவர் பரத்தையரைத் தொகுத்துக் கொண்டு வந்து ஆடல் பாடல் நிகழ்த்துவது பண்டைய வழக்கம். அதுபோல உள்ளூர் பரத்தையர் பலரையும் நுகர்ந்த தலைவன் வேற்றூர்ப் பரத்தையரையும் நுகர விரும்பித் தேரூர்ந்து அயலூருக்குச் செல்வான் என்பதை,

**இந்திர விழாவிற் புவி என்ன**

**புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்**
**இவ்வூர் மங்கையர்த் தொழுந்தினி**
**எவ்வூர் நின்றன்று மகிழ்ந நின்தேரே (ஐங்குறுநூறு, பா. 62)**

என்று ஐங்குறுநூற்றுப்பாடல் கூறுகிறது.

**பரத்தையர் வாழ்க்கை**

பரத்தையர் ஆடல் பாடல் முதலான கலைகளில் வல்லவர்களாய் வாழந்துள்ளனர். இவர்கள் தலைவன் துணங்கையாடுங்கால் கைகொடுப்போராகவும் நீராட்டின் போது துணையாகின்றவர்களாகவும் பூம்பொழில் விளையாட்டின் போது கலந்து உறவாடுகின்றவர்களாகவும், தலைனோடு வதவை அயர்ந்து துணையாகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

திருமணத்திற்கும் பின்னரே தலைவன் பரத்தையை நாடி வருகின்றான். தலைவி கருவுற்ற நிலையிலும், மகப்பேறு பெற்ற நிலையிலும் தலைவன் பரத்தையை நாடிச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றன. நடைமுறை வாழ்க்கையில் பரத்தையர் மகப்பேறு எய்துவதற்குரிய தன்மைப் பெற்றிருப்பினும் சங்க பாடல்களில் பரத்தையற் மகப்பேறு பெற்றதாகக் குறிப்புகள் இடம் பெறவில்லை. அவர்கள் எல்லாக் காலத்திலும் இளமை நலம் குன்றாமல் அழகுச் சிறப்பால் செருக்குற்றிருந்தவர்களாகவே காட்டப்பெற்றனர். இவர்கள் தம்மிடம் இன்பம் துய்க்க வரும் ஆடவரிடமிருந்து பொறாமை பெற்று வாழ்ந்தனர்.

**தம்மிடம் வந்திருந்த தலைவனைத் தலைவி கவர்ந்து தன்பால் இருத்திக்கொள்வாளோ என்ற அச்சத்தினால் பரத்தையர் அம்பல் மொழிந்தனர் என விளக்கமளிக்கப் பட்டுள்ளமை கவனிக்கத் தக்கதாகும். பரத்தையரோடு உறவு கொண்டு ஒழுகுவதையே நாட்டமாக கொண்டு விளங்குகின்றான். (மா. மதியழகன், ப. 2)**

பரத்தையர் ஊரன் பெண்டிர், மங்கை, மகளிர், அறிவை என்ற பொது நிலையிலும், ஒருத்தி, எதிலாள், பிறள், பரத்தை, கொண்டி மகளிர், விலைநலம் பெண்டிர், விலைக்கணிகை, கணிகை என்ற சிறப்பு நிலைகளிலும் குறிக்கப்பட்டுள்ளனர். பரத்தையர் ஏழிசை வாசிக்கும் இன்னிசைக்கலையில் சிறந்து விளங்கினர். இவர்தம் கொண்டையிலே வெண்ணிறப் பூக்களை அணிந்துக்கொள்வர். புற மண்டலத்தாரும் உள்ளூரிலுமாய் தம் வடிவழகை விரும்பி வரும் இளையராகிய செல்வந்தர் பலரை விரும்பிச் சேர்வர்.

முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியில், குலைந்த ஒப்பனையைச் சீர்செய்து கொள்வர். தம்மையடுத்து வரும் செல்வந்தரை வஞ்சனையுடைய பொய் வார்த்தையால் முதலில் கூடிக்கொண்டு நுண்ணிய பூண்களோடு கூடிய அவர்தம் மார்பைத் தம் மார்பிலே வடும்படும்படியாகத் தழுவிக்கொள்வர். அன்புடையார் போலக் கூடிய தழுவலை அவர் பொருள்தரும் அளவும் மறைத்து அவருடைய செல்வம் எல்லாவற்றையும் வாங்கிக்கொள்வர். வண்டு பூவில் தேனை உண்டு நீங்குவதுபோல், பொருள்பெற்ற பின்னர் அவரைத் திரும்பியும் பாராள். பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைப்போல, மேலும், பொருள் தரும் பிறரை நாடித் தம்முயிரைப் பாதுகாக்கின்ற பரத்தையை வாழ்க்கையிலேயே திளைத்து நின்றனர். தம்மைக் கண்டாரை நெஞ்சக் காயத்தால் வருத்தமுறச் செய்வித்து அவர்பால் உள்ள பொருள்களைக் கொள்ளைக் கொள்ளுதலின் இவரை நெஞ்சு நடுக்குறுபு கொண்டி மகளிர் என்றனர்.

**பரத்தைப் பாத்திரப் படைப்பு**

பரத்தையரின் செயல்பாடுகள் அனைத்தும் ஆணாதிக்க வரையறைகளுக்கு எதிரானவை. அவற்றை மீறுபவை இருப்பினும் சங்கப் புலவர் மரபானது பரத்தையர் குறித்தான தன் பதிவுகளை ஒப்பீட்டளவில் தணிக்கைக்கு உட்படுத்தாமல் பதிவு செய்துள்ளது. தலைவி பேசவே கூடாது, என்றிருந்த நிலையில் பரத்தை உரத்துப் பேசுகிறாள்; தலைவனைக் கேளி செய்கிறாள்; விமர்ச்சிகிறாள்; தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டும் பேசுகிறாள்;

தலைவனை அடைவேன் எனச் சூளுரைக்கிறாள். பரத்தையின் இந்த மரபு மீறல்கள் எல்லாம் சங்கக்காலத்து ஆண்பால் புலவர்களால் பதிவு செய்யப்பட்டப் பாடல்களாகும்.

தொல்காப்பியத்திலிருந்து சங்க இலக்கியம் வேறுப்பட்டு பரத்தைக்குறிய பாத்திரப்படைப்பைப் பெரிதும் பரந்துப்பட்ட நிலையில் படைத்துள்ளமைக்கான காரணம் கண்டறிவது இன்றியமையாதகின்றது. மனித இனத்தின் ஆரம்பக்கால வாழக்கை முறையினை விளக்குவதாகச் சங்க இலக்கியம் அமைகிறது. ஆரம்பகால வாழ்க்கை நிலை ஒருவருனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாட்டிற்கும் பக்குவப்படாத காலம் அக்காலத்தில் வீரநிலைப் பெருகிக் காணப்பட்டதைப் போல் பரத்தை நிலையும் பெருகி இருக்கக்கூடும். அவற்றைப் புறம்போக்காமல் அப்படியே சங்கப்பாடல்கள் முன்னிறுத்துகின்றன. சங்கப் பாடல்களில் பரத்தையற்களைக் காமக்கிழத்தி, காதற்பரத்தை, இற்பரத்தை ஆகிய அனைவரையும் ஒருவகையினராகவும், சேரிப்பரத்தையரை மற்றொரு பிரிவினராகவும் காட்டியுள்ளனர்.

மனிதனின் அகக்கோட்பாட்டினை இலக்கணமாக வரையறுத்துத் தொல்காப்பியர் பரத்தையைப் பற்றி அதிகம் பேசப்படாமை ஒழுங்குமுறை வாழ்க்கைக்கு முன்னேறியிருக்கும் மகளுக்குப் பரத்தமை தேவையில்லாதது என கருதி அவ்வாழ்வினை அவர் புறந்தள்ளியிருக்கக்கூடும். எனவே, சங்க இலக்கியம் தொல்காப்பியத்திற்கு முந்தைய பாடல்களாகவும், பிந்தையை பாடல்கள் தொல்காப்பியத்திற்குபின் தோன்றிய பாடல்கள் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும் சிறப்பு பொருந்தியதாகவும் உள்ளன. தொல்காப்பியர் பரத்தைக்குரிய கூற்று நிகழ்வினைப் பரந்துபட்ட நிலையில் சுட்டி செல்லாதவிடத்து சங்க இலக்கியம் அதனை விரிவுபடுத்துவதும், தன்னிலைக் கூற்றாக வெளிப்படுத்தி நிற்பதும் என்ற நிலையில் தொல்காப்பியத்திலிருந்து சங்க இலக்கியம் வேறுப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

பரத்தையைப் பற்றி தொல்காப்பியம் ஒன்பது இடங்களில் மட்டுமே குறிப்பிட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் பரத்தைக் கூற்றாக 54 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. உரிமை அல்லது நிரந்தரமற்ற உறவாகவே பரத்தமைக் காட்டப்படுகிறது. பரத்தையற் பொது மகளிர் வரைவின் மகளிர், பொருட்பெண்டிர், தேவரடியாள், விலைமகள், பதியிலாளர், கணிகையார், வேசி, தாசி, விபச்சாரி என்று பல பெயர்களில் அழைக்கபட்டதை அறிய முடிகிறது. மக்கள் அனைவரும் வாழுமிடத்திற்கு வாழாமல் பரத்தையர் ஊரின் புறத்தே தனியே வாழ்ந்துள்ளனர். பரத்தையர் இசை, நடனம், உள்ளிட்ட கலைகளில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். பரத்தை தலைவியைப் போன்று இல்லாமல் கட்டற்ற சுதந்திர நிலையில் வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். சங்க காலம் பரத்தையைத் தூற்றினாலும் அதனை தடுப்பதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை. சங்கக்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்கிற போக்கு வலியுறுத்தப்பட்ட போதிலும், பெண்களுக்குக் கற்பொழுக்கம் திணிக்கப்பட்டப் போதிலும், ஆணாதிக்க வர்க்கம் தான் மேற்கொண்ட போர்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பெண்களைத் தங்களுக்குரிய போகப் பொருட்களாகப் பரத்தையரைத் தோற்றுவித்து அதனை வளர்த்தெடுத்துள்ளனர்.

**குறிப்புகள்**

[1] இளம்பூரணனார். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை - 600014, 2005.

[2] செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2004.

[3] சோம சுந்தரனார், பொ. வே. *ஐங்குறுநூறு.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966.

[4] பரிமேலழர். *திருக்குறள்.* திருமகள் நிலையம், சென்னை – 600001, 1998.

[5] பொ.வே.சோமசுந்தரனார். *குறுந்தொகை.* கழக வெளியீடு, சென்னை.

[6] புலியூர்க்கேசிகன். *பதிற்றுப்பத்து.* சாரதா பதிப்பகம், சென்னை.

[7] மதியழகன், மா. “குறுந்தொகையில் உவமை.” *முத்துக்கமலம்* பன்னாட்டுத் தமிழ் மின்னிதழ், ISSN-1454-1990.

[8] மாணிக்கவாசகன். *புறநானூறு.* உமாபதிபகம், சென்னை– 6000015, 1998.

[9] விசுவநாதன், (உ.ஆ). *கலித்தொகை.* கழக வெளியீடு, சென்னை - 10, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.